முடியாது. அந்த மலைப் பகுதிக்கு உடனடியாக ரோடு போட வில்லை என்றால், மலைவாழ் மக்கள் கீழே வரமுடியாத நிலை ஏற்படும். எனவே, அமைச்சர் அவர்கள் இதனை மறுபரி சீலனை செய்து, வனத்துறையிடமிருந்து, நெடுஞ்சாலைப் பணித் துறைக்கு அந்த தார்ச் சாலையை ஒப்படைப்புச் செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், கோபி வட்டம், சத்தியமங்கலம் தொகுதி, கெம்பன்நாயக்கன் பாளையத்தில் இருந்து கடம்பூர் வரை செல்லும் சாலையானது வனத்துறைக்கு முழுவதுமாகச் சொந்தமானதாகும். மேற்கண்ட சாலையின் இருமருங்கிலும், அடர்ந்த காடுகள் உள்ளன. இச்சாலை ஒதுக் குக் காட்டுப் பகுதி வழியாகச் செல்கிறது. இப்பகுதியில் மிக விலையுயர்ந்த சந்தன மரங்கள் உள்ளன. மற்றும் வன உயிர் ங்கள் வசித்து வருகின்றன. ஆக, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மத்திய அரசின் புதிய சட்டத்தின் அடிப்படையில், மைய அரசின் அனுமதியின்றி வனச் சாராப் பணிகளுக்கு, எந்த ஒரு வனப் பகுதியையும் பயன்படுத்த முடியாது என்கிற கார ணத்தால்தான், அது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை என் பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாத்தியம் இல்லை என்று கூறி னாலும், இந்தத் திட்டம் இந்த ஆண்டே துவக்கப்படுமா என் பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈடுசெய் வன வளர்ப்புத் திட்டம்" என்கிற ஒரு திட்டத்தின் அடிப்படையில், சாலைகள் செப்பனிட முடியும். இதனுடைய அடிப்படையில், இந்தத் திட்டத்தை ஏற்று, அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்காக நெடுஞ்சாலைத் துறையோடு, வனத்துறை வேண்டியது. நெடுஞ்சாலைத் துறை, அச்சாலையை வனத்துறையிலேயே வைத்துக்கொண்டு பரா மரிப்புச் செய்துகொள்ளுமாறு, தலைமைப் பொறியாளர் 20—7—1992 அன்று ஆலோசனை தெரிவித்துள்ளார். அதற்குப் பிறகு, வனத்துறை, அதனுடைய செலவு என்னவாகும் என் பதைக் கணக்கிட்டுப் பார்த்ததில், 6 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்பதைத் தெரிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்வியை மையமாக வைத்து அதனை நம்முடைய திட்டப் பிரேரணையில் இணைத்துக் கொண்டு, அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்காக, வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 35, திரு உ. பலராமன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன் கேட்கிறார். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

35—

திரையரங்குகளில் மூன்று காட்சிகள் மட்டும் அனுமதித்தல்.

* 14259—திரு. உ. பலராமன் :

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திரையரங்குகளில் காலை, நண்பகல் காட்சிகளில் ஆபாசம் வன்முறைக் காட்சிகள் நிறைந்த படங்களாகவே திரையிடப் படுவதால், அக்காட்சிகளை ரத்து செய்து மூன்று காட்சிகளை மட்டும் அனுமதிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் என்று பல பேரைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையில், திரையரங்கு உரிமையாளர்கள் பகற் காட்சிகளில், ஆபாசத்தைக் கொண்ட படங்களை எல்லாம் இன்றைக்குத் திரையிட்டுக் கொண்டிருக்கி றார்கள். இதைவிடக் கொடுமை என்னவென்றால் வயோதிகர் கள் கூட போட்டி போட்டுக் கொண்டு ஆபாசப் படம் பார்ப்ப தற்காகச் செல்லுகின்ற அளவுக்கு திரையரங்குகளில் ஆபாசப் படங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது போன்ற ஆபாசப் படங்களைக் காட்டி, சமுதாயச் சீரழிவை உருவாக்கிக் கொண்டிருக்கக்கூடிய திரைப்பட உரிமையாளர் களைத் தண்டிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா; அல்லது திரையரங்குகளின் உரிமத்தை ரத்துச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05 .

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் காட்டப்படுகின்ற திரைப் படங்கள் மத்திய அரசின் தணிக்கைக் குழுவில் காட்டிய தற்குப் பிறகு அவர்களுடைய அனுமதி பெற்றதற்குப் பிறகு தான், அனுமதிக்கப்பட்ட காட்சிகள்தான் திரையரங்குகளில்

காட்டப்பட்டு வருகின்றன. தணிக்கை செய்யப்பட்டு வெட்டப்பட்ட காட்சிகளைத் திரையரங்குகளில் காட்டுவதில்லை. அப்படிக் காட்டப்படுமேயானால் அப்படிப்பட்ட திரையரங்குகளின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருக்கின்றன; அல்லது முழுமையாகவும் ரத்துச் செய்யப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தவிதமான நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறினாலும் கூட, இன்றைக்கு கண்கூடாக * .... பார்த்ததாகக் கூறுகிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள தியேட்டர்களில் கூட இந்த ஆபாசக் காட்சிகள், வன்முறைக் காட்சிகள் உள்ள சினிமாப் படங்கள் காட்டப்படுவதாகத் தெரிய வருகிறது. இவைகளை அரசு கண்காணித்துத் தடை செய்ய வேண்டுமென்று பல முயற்சிகளைச் செய்தாலும் கூட, அது பலனளிக்காமல் இருக்கின்ற காரணத்தால் அதை மத்திய அரசு தணிக்கைக் குழு வெட்டுகிறதோ, என்னமோ, அதைப்பற்றி நமக்குப் பிரச்சினை இல்லை. இன்றைக்கு நாம் கண்காணித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையில் இப்படிப்பட்ட படங்கள் வெளியிடப்படும்பொழுது அதை காவல் துறை மூலமாகவோ அல்லது அதைவிடக் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடிய துறைகள் மூலமாகவோ அதைக் கண்காணித்து, கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், இந்த நிலைமை நீடிக்குமேயானால் ஒரு பெரிய சமுதாயச் சீர்குலைவு ஏற்படும் அந்த அபாயத்திலிருந்து விடுவிக்கின்ற பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அரசு இதில் தீவிர கண்காணிப்பைச் செலுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மிகக் கண்காணிப்புடன் கண்காணித்து வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர், * கண்கூடாகப் .... பார்த்ததாகக் கூறுகிறார்கள் என்று சொன்னார். எங்கு பார்த்தார்; எந்தத் திரையரங்கைப் பார்த்தார்; எந்தக் காட்சியைப் பார்த்தார்; அதைச் சுட்டிக்காட்டினால் நிச்சயம் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்கூடாக என்றால் இப்படிப்பட்ட விவரங்களைக் * கண்கூடாகப்........ பார்த்ததாகக் கூறுகிறார்கள் என்று சொல்லுகிறார்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.